# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.88/2025

**Deposition of Witness for Prosecution PW 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சக்திவேல் | Father's Name | : | சேகர் |
| Village | : | வடுவூர் சாத்தனூர் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 25 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 05th day of December 2025.**

**(A1 , A2, A4 to A6 are present. A3, A7, A8 absent. For A3, A7, A8 petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடுவூர் சாத்தனூரில் வசித்து வருகிறேன். கலியமூர்த்தி குடும்பத்ததையும் எதிரிகளையும் எனக்கு தெரியும். 07.08.2023 ம் மாலை 4.30 மணிக்கு நானும் என் நண்பர் வீரமணியும் புள்ளவராயன்குடிகாடு மாவடி அம்மன் கோவிலுக்கு சென்றோம். 4.45 மணிக்கு புள்ளவராயன்குடிக்காடு மாவடி அம்மன் கோவில் குளத்துகரையில் எதிரிகள் பாலகிருஷ்ணன், விஸ்வநாதன் ஆகியோரை குற்ற காரணம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.05 15:05:54 +0530

கூறி கைது செய்து பாலகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தார். அதில் நான் 2 வது சாட்சியாகவும் வீரமணி முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.9**. மாலை 6.00 மணியளவில் எங்கள் முன்னிலையில் வீட்டை இடிக்க பயன்படுத்திய 6 செ.மீ. இரும்பு பாகமும், 45 செ.மீ. மர கைப்பிடியுடன் கூடிய 51 செ.மீ. மொத்த நீளமுடைய சுத்தியல் ஒன்று, 6 செ.மீ. இரும்பு பாகமும், 68 செ.மீ. மர கைப்பிடியுடன் கூடிய 74 செ.மீ. மொத்த நீளமுடைய சுத்தியல் ஒன்று, 6 செ.மீ. இரும்பு பாகமும், 49 செ.மீ. மர கைப்பிடியுடன் கூடிய 55 செ.மீ. மொத்த நீளமுடைய சுத்தியல் ஒன்று, 58 செ.மீ. நீளமுடைய சுத்தியல் ஒன்று, 55 செ.மீ. நீளமுடைய சுத்தியல் ஒன்று, 163 செ.மீ. நீளமுடைய இரும்பு பாறை ஒன்று, 168 செ.மீ. நீளமுடைய இரும்பு பாறை ஒன்று, பதிவெண் இல்லாத ஆட்டோ ஒன்று ஆகியவற்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சக்திவேல் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி அயிட்டங்கள் ஏற்கனவே சா.பொ.1 முதல் சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.05 15:06:00 +0530

**குறுக்கு விசாரணை**

புள்ளவராயன்குடிகாடு மாவடி அம்மன் கோவில் அமைந்துள்ள பகுதி தற்போது ஒரு வீதி மட்டுமே உள்ளது. நானும் வீரமணியும் அந்த இடத்திற்கு செல்லும்போது போலீஸ், எதிரிகள் மற்றும் 4 / 5 நபர்கள் இருந்தார்கள். நான் போகும்போதே போலீசார் அந்த இடத்தில் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு என்னை எந்த நேரத்திலும் போலீசார் விசாரிக்கவில்லை. போலீசார் என்னுடைய பெயர், முகவரியை தவிர வேறெதுவும் போலீசார் கேட்கவில்லை. எனது வாக்குமூலத்தை போலீசார் கணினியில் பதிவு செய்தார்களா, கையால் எழுதிக் கொண்டார்களா என்றால் கையால் எழுதிக் கொண்டார்கள். நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன் போலீசார் அங்கிருந்தார்கள். நான் போய் கொண்டிருந்தபோது போலீசார் விசாரித்து எழுதிக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 மற்றும் எதிரிகள் இருவரும் எனக்கு அறிமுகமானவர்கள். அவர்களுக்குள் உரிமையியல் பிரச்சனை வழக்கு என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் சென்றதாக சொல்லும் இடத்திற்கு போலீசார் வரவில்லை எனவும் போலீசார் எதிரிகளை கைது செய்யவில்லை எனவும் போலீசாரிடம் எதிரிகள் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை எனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.05 15:06:08 +0530

அவர்கள் எந்த தடய பொருளையும் போலீசாரிடம் எடுத்து கொடுக்கவில்லை எனவும் சொன்னால் தவறு. அ.சா.4 க்கு மிக நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.05 15:06:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.